(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

2—2—1982ஆம் தேதியன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின்படி சட்டமன்றப் பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

3—2—1982 (புதன்கிழமை.)	பேரவைக் கூட்டம் இல்லை.
4—2—1982 (வியாழக்கிழமை.) 5—2—1982 (வெள்ளிக்கிழமை.)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.
6—2—1982 (சனிக்கிழமை.)	
7—2—1982 (ஞாயிற்றுக்கிழமை.)	விடுமுறை.
8—2—1982 (திங்கட்கிழமை).	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி.
9—2—1982 (செவ்வாய்க்கிழமை.)	ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சியும் பதிலுரையும்.
10—2—1982 (புதன்கிழமை) 11—2—1982 (வியாழக்கிழமை)	நீதிபதி திரு. பால் கமிஷன் அறிக்கை பரிந்துரைகள்மீது அரசு எடுத்த நடவடிக்கைபற்றி 2—2—1982 அன்று பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கைமீது விவாதம்.
12—2—1982 (வெள்ளிக்கிழமை.)	திரு. எம். ஏ. முருகேசன் விசாரணைக் குழுவின் பரிந்துரைகள்மீது அரசு நடவடிக்கைகள்பற்றி 30—4—1981 அன்று பேரவையில் வைக்கப்பெற்ற அறிக்கைமீது விவாதம்.

13—2—1982 (சனிக்கிழமை.) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

14—2—1982 (ஞாயிற்றுக்கிழமை.) விடுமுறை.

15—2—1982 (திங்கட்கிழமை.) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

16—2—1982 (செவ்வாய்க்கிழமை.) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

17—2—1982 (புதன்கிழமை.)
18—2—1982 (வியாழக்கிழமை.) } தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1981–82ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் 1980–81ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

(5) ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

*திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆளுநர் உரையின்மீது எங்களுடைய கருத்துக்களை வழங்க விரும்புகிறேன். இந்த அறிக்கையிலே மத்திய சர்க்கார் மாநில அரசுக்கு 48·90 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வறட்சித் துயர் தணிப்புக்காக மாநில அரசு 55.24 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட முக்கால் பங்கிற்கு மேலாக முழுமையான அளவிற்கு என்று கூடச் சொல்லலாம், கிடைக்க வேண்டியது கிடைத்து இருப்பதாலே மாநில அரசு அதிலே பெருமை கொள்ளும் என்று நம்புகிறேன.

ஆனால அதே சமயத்திலே வறட்சித் துயா தணிப்புப் பணி என்ற முறையில் இந்த அறிக்கையிலே இரண்டாவது பக்கத்திலே A Committee constituted with leaders from all Political parties to supervise the drough relief works proved very helpful. என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் மாநில அளவில ஒரு கமிட்டி அமைக்கப்பட்டதா அந்த கமிட்டி அறிக்கை கொடுத்திருக்கிறதா என்று தெரியவில்லை. வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் நடக்கிறபோது அவைகளை